மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமை!

அம்பாசமுத்திரம் தொகுதி இடைத்தேர்தலில் கழகத் தலைவர் போட்டியிட வேண்டும்!

நெல்லை மேற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை,ஜூன் 11–

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் (09.06.2026 செவ்வாய்க் கிழமை) அன்று மாலை 04.00 மணிக்கு நெல்லை மேற்கு மாவட்ட அலுவலகம் கலைஞர் அரங்கில் வைத்து நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தலைமை யில் தலை மைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், கே.கே.சி.பிரபாகரன், மாநில தொண்டர் அணி துணை செய லாளர் ஆவின் எம்.ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன், மாவட்ட துணைச்செயலாளர்கள் மா.மைக்கேல், ப.தமயந்தி, கு.தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் விரைவில் வரவிருக்கும் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர் தலில் நமது கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்கள் போட்டியிட வேண்டுமென இக் கூட்டத்தில் ஏக மனதாக தீர்மா னம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவு டையப்பன் பேசுகையில். நெல்லை மேற்கு மாவட்டம் அம் பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதிய இடைத்தேர்தல் விரை வில் வரவிருக்கிறது.ஆகவே,ஒன் றிய,நகர பேரூர், கிளை கழக செயலாளர்கள் மிகுந்த கவனத்து டன்,ஆர்வத்துடன், ஒற்றுமையு டன் செயல்பட்டு அம்பாசமுத்திரம் தொகுதியில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும்.அனைத்து சார்பு அணி நிர்வாகிகளும் உடன் இணைந்து செயல்பட வேண் டும்.அதற்கான பணிகளை விரைவில் தொடங்க வேண்டும் என்றார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப் பினர்கள் வி.இராம ச்சந்திரன், கா.அபூபக்கர், இரா.ரவிச்சந் திரன்.

ஒன்றிய செயலாளர்கள், பொறுப்பாளர்கள் அம்பாசமுத்தி ரம் மேற்கு பா.ஜெகன்,சேரன்ம காதேவி மேற்கு முத்து கிருஷ் ணன், ஆலங்குளம் கிழக்கு மு.செல்லத்துரை,தெற்கு, சிவக்கு மார், மேற்கு க.சமுத்திர பாண்டி யன், கீழப்பாவூர் வடக்கு சீ. பொன்செல்வன், கடையம் மேற்கு ஆ.ஜெயக்குமார்,கிழக்கு இரா.குமார், பாப்பாக்குடி வி.ஏ.மாரி வண்ணமுத்து

நகர செயலாளர் வி.கே. புரம் பி.கணேசன், பேரூர் செயலாளர் கள் மணிமுத்தாறு முத்து கணே சன், கல்லிடைக்குறிச்சி இசக்கி பாண்டியன்,வீரவநல்லூர் சுப் பையா, சேரன்மகாதேவி மணலா செல்வராஜ்,மேலச்செ வல் மணிகண்டன், கோபால சமுத்திரம் டி.வானுவாமலை, ஆழ்வார்குறிச்சி ஆ.அழகேசன், முக்கூடல் லஷ்சுமணன்,ஆலங் குளம் நெல்சன், கீழப்பாவூர் ரெ.ஜெகதீசன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள்,மகளிர் அணி அமைப்பாளர் திவ்யா மணிகண் டன்.மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சங்கீதா சுதாகர், வழக்கறிஞர் அணி ஜெ.செல்வசூ டாமணி,இலக்கிய அணி நெல் லைமணி,கலை இலக்கிய பகுத் தறிவு பேரவை அணி சு.க. நெடுஞ்செழியன்,தகவல் தொழில்நுட்ப அணி பிரேம் ஆனந்த், அயலக அணி கா. பீர்முகம்மது, பொறியாளர் அணி அருணன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வேல் முருகன், ஆகாஷ் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பா ளர் செல்வ சூடாமணி நன்றி கூறி னார்.

இந்தக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வரு மாறு:–

நடந்து முடிந்த தமிழ்நாடு சட் டமன்ற பொதுத் தேர்தலில் அம் பாசமுத்திரம் சட்டமன்ற தொகு தியில் போட்டியிட்டு வென்ற அ.தி. மு.க. சட்டமன்ற உறுப்பினர் பதவி ஆசையில் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜி னாமா செய்துள்ளதால்,விரை வில் நடைபெறவுள்ள அம்பா சமுத்திரம் சட்டமன்ற இடைத்தேர் தலில் நமது கழகத்தலைவர் அன் புத்தளபதியார் முத்துவேல் கரு ணாநிதி ஸ்டாலின் அவர்கள் போட்டியிட வேண்டும்.என இக் கூட்டம் கேட்டுக்கொள்வதோடு, கழகத்தலைவர் அன்புத்தளபதி யார் அவர்களின் வெற்றிக்கு கழக நிர்வாகிகள், கழகத்தோழர் கள் அனைவரும் இரவு,பகல் பாராது, கண் துஞ்சாமல் உழைத்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்.என அனைவரையும் மாவட்ட கழகம் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்த்தாய் வாழ்த்து அவமதிப்புக்கு கண்டனம்!

புதியதாக தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பில் அமர்ந்துள்ள முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் பதவியேற்பு விழா, சட்டப்பேர வைத் தலைவர் பதவியேற்பு விழா,அமைச்சர்கள் பதவியேற்பு விழா என ஆளுனரால் நடத்தப் பட்ட அனைத்து பதவியேற்பு விழா நிகழ்ச்சிகளிலும் தமிழர்க ளின் நெஞ்சில் நிலைத்திருக்கும் மனோன்மணியம் சுந்தரனார் எழுதிய “தமிழ்த்தாய் வாழ்த்து” பாடலை மூன்றாவதாக ஒலிக்கச் செய்து,தமிழை மூன்றாவது இடத்திற்கு கொண்டு சென்ற தோடு மட்டுமல்லாமல்,அரசு நிகழ்ச்சிகளில் ஒரு போதும் இல் லாத வகையில் “வந்தே மாதரம்” பாடலை முதலாவதாக ஒலிக்க செய்ததையும், அதை கண்டிக் காத தமிழ்நாடு அரசின் மெத்தன மானப் போக்கை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

விவசாயிகளின் கடனை முழுமையாக தள்ளுபடி செய்க!

தமிழ்நாட்டின் தேர்தலுக்கு முந்தைய பிரசாரத்தின் போதும்,தேர்தல் அறிக்கையி லும் த.வெ.க.கட்சியின் தலைவர் சி.ஜோசப் விஜய் அவர்கள் விவ சாயிகளின் விவசாய பயிர்க்கடன் களை ரத்து செய்யப்படும் என அறிவித்துவிட்டு, ஆட்சிக்கட்டி லில் அமர்ந்த பின்பு தமிழ்நாட்டு விவசாயிகளை வஞ்சிக்கும் நோக்கில் பாரபட்சமான முறை யில் கடன் தள்ளுபடிகளை அறி வித்து,விவசாயிகள் தினந் தோறும் ரோட்டில் இறங்கி போராடி வரும் நிலை உருவாகி யுள்ளது.இது தமிழகவிவசாயிக ளின் வாழ்வாதாரத்தை பாதிக் கும் கடன் தள்ளுபடி ஆகும். ஆகவே தமிழக அரசு உடனே போராடிவரும் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று,அதன் படி விவசாய கடன்களை முழுவ து மாக தள்ளுபடி செய்து அறி விக்க இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த விவசாய பருவத்தில் அறு வடை செய்த நெல்லை ஒன் றிய,மாநில அரசுகளின் 30க்கும் மேற்பட்ட நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்டது.பல ஆயிரக்க ணக்கான விவசாயிகள் தாங்கள் விளைவித்த நெல்லை அரசு கொள்முதல் நிலையங்களில் விலைக்கு கொடுத்தார்கள். மாநில அரசு கொள்முதல் நிலை யத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு நமது கழகத்தலைவர் அன்புத்தளபதி யார் அவர்களின் அரசு பதவியில் இருக்கும்போது. விவசாயிகளுக்கு நெல்லுக்கான பணம் அவரவர் வங்கிக்கணக்கில் உடனடியாக வரவு வைக்கப்பட்டு விட்டது.ஆனால் ஒன்றிய அரசு கொள்முதல் நிலையத்தில் கொள் முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு மூன்று மாதங்கள் ஆகியும்.விவ சாயிகளுக்கு இதுவரை பணம் வரவு வைக்கப்படவில்லை. சுமார் 82 கோடிக்கு மேல் விவசா யிகளின் பணம் வரவு வைக்கப் படவில்லை.இதற்காக விவசாய பெருங்குடி மக்கள் தினமும் போராடி வரும் நிலையில் தமிழ் நாடு அரசு உடனடியாக விவசாயி களின் கோரிக்கையை ஏற்று, ஒன்றிய அரசிடம் வலியுறுத்தி விவசாயி களின் பணத்தை அவர் களது வங்கி கணக்கில் உடனே வரவு வைக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்கேடு!

சி.ஜோசப் விஜய் தமிழ்நாட் டின் முதலமைச்சராக பதவி யேற்ற 10.05.2026 தேதியில் இருந்து தமிழகம் முழுவதும் கொலை, கொள்ளை,பாலியல் வன்கொடுமை,ரவுடியிசம் என பல குற்ற சம்பவங்கள் தினந்தோ றும் நடந்து வருகிறது.அதைப் பற்றி கவலைப்படாத முதலமைச் சர் தமிழ்நாட்டை ஆண்டு வருகிறார். தேர்தலுக்கு முந் தைய தேர்தல் பிரச்சாரத்தின் போது அவர் பேசியபோது,தான் ஆட்சியில் அமர்ந்த மறுநிமிடம் தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கை உடனே சரிசெய்வேன் என்று சினிமா பாணியில் வசனம் பேசி விட்டு, இப்போது நான் என்ன செய்ய முடியும், எல்லாவற்றிக் கும் கால அவகாசம் வேண்டும் என்று கூறுகிறார்.இது நாட்டு மக் களை ஏமாற்றி மோசடி செய்யும் செயல். சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட கால அவகாசம் கேட்பது என்பது கேலிக் குரியதாகும்.இது வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழகத்தில் சட்ட ஒழுங்கை சரி யாக பராமரிக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளின் தமிழ்நாட்டை ஆட்சி செய்த நமது கழகத்தலைவர் அன்புத்தளபதி யார் அவர்கள் ஆட்சியில்,நகரம் மற்றும் கிராமங்களில் மின்தடை யின்றி மின்சாரம் தடையில்லா மல் வழங்கப்பட்டு வந்தது.புதிய தாக ஆட்சி பொறுப்பிற்கு வந்துள்ள நிர்வாக திறமையற்ற த.வெ.க.அரசு ஆட்சியில் பொது மக்கள் நித்தம் மின்தடையால் கஷ்டப்பட்டு,இரவில் நிம்மதியாக தூங்க முடியாத நிலையில் சாலையில் வந்து உட்கார்ந்து போராடி வருகின்றனர். இந்த நிலைமை முதலமைச்சர் தொகு தியான பெரம்பூரிலும் உள்ளது. தமிழ்நாடு முழுவதும் இந்த மின் தடையால் பொதுமக்கள், குழந் தைகள் மற்றும் முதியவர்கள் என அனைவரும் நிம்மதியை இழந்து உள்ளனர்.ஆகவே த. வெ.க. அரசு தமிழ்நாட்டில் மின் தடை இல்லாத அளவுக்கு உரிய நடவடிக்கை எடுத்து மின்உற்பத்தியை சரியாக கவ னித்து மக்களுக்கு தடையில்லாத மின்சாரம் கிடைக்க ஆவண செய்யுமாறு இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

குதிரை பேர அரசியல் செய்யும் த.வெ.க.!

பெரும்பான்மை மக்கள் விரும்பாத ஆட்சியை அமைத் துள்ள த.வெ.க.அரசு தொடர்ந்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை குதிரை பேரம் செய்து,சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜி னாமா செய்ய வைத்து வாக்க ளித்த மக்களின் விருப்பத்திற்கு எதிராக செயல்படும், வாக்காளர்க ளின் மனநிலைக்கு எதிராக இடைத்தேர்தலை புகுத்தும் த.வெ.க.அரசை இக்கூட்டம் வன் மையாக கண்டிக்கின்றது.

பா.ஜ.க. அரசுக்கு துணைபோகும் த.வெ.க.!

ஒன்றிய பா.ஜ.க அரசு PM ஸ்ரீ என்ற திட்டத்தின்கீழ், மும்மொ ழிக் கொள்கையை மாநில அரசு களின் மேல் திணித்து,இந்தி மொழியை கட்டாயமாக்கும் ஒன் றிய பா.ஜ.க அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதோடு அதற்கு துணை போகும் தமிழக த.வெ.க. அரசையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் சி.ஜோசப் விஜய் தேர்தலுக்கு முந் தைய பிரச்சாரத் திலும்,தேர்தல் அறிக்கையிலும் கூறியுள்ளபடி, மகளிருக்கு மாநிலம் முழுவதும் கட்டணமில்லா பேருந்து பய ணம்,குடும்பத்திற்கு வருடத்திற்கு 6 சிலிண்டர், மகளிர் உரிமைத் தொகை ரூ.2,500 ம்,வேலை யில்லா பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.4,000 ம், முதியோர் உத வித்தொகை ரூ.3,000 ம் என தாங்கள் கொடுத்த வாக்குறுதி களை நாட்டு மக்களுக்கு உடன டியாக நிறைவேற்றி தந்திட வேண்டும் என்று தமிழ்நாடு த.வெ.க. அரசை இக்கூட்டம் கேட் டுக் கொள்கிறது.

தி.மு.க தேர்தல் அறிக்கை யில் கூறப்பட்டுள்ள அம்பாசமுத்தி ரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பாபநாசம்மணிமுத்தாறு அணைகள் இணைப்பு,அம்பாச முத்திரம் விக்கிரமசிங்கபுரம் சாலையில் உள்ள இரயில்வே கேட்டில் மேம்பாலம்,வீரவநல்லூ ரில் அரசு மகளிர் கலைக்கல் லூரி, அம்பாசமுத்திரம் தொகுதி யில் அரசினர் பாலிடெக்னிக், சேரன்மகாதேவி பகுதியில் சிப் காட் தொழிற்சாலை ஆகிய திட் டங்களை அம்பாசமுத்திரம் சட்ட மன்ற பொதுமக்களுக்கு உடனே நிறைவேற்றித் தர மாநில அரசை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

கூட்டணி துரோகம் செய்த காங்கிரசிற்கு கண்டனம்!

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் தொடர்ந்து 20 வரு டங்களுக்கு மேலாக தி.மு.க. வுடன் கூட்டணியில் இருந்து, ஒன்றியத்தில் இருமுறை ஆட்சி அமைய தி.மு.க.தயவை வேண்டி ஆட்சி அமைத்து,பதவி சுகங்களை அனுபவித்து விட்டு,கடந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் 28 இடங்களை பெற்று,பல இடங்களில் வேட்பா ளர்கள் தேர்வு செய்ய குழப்பங்கள் ஏற்பட்டு,கடைசி நாளில் வேட்பாளர்களை அறி வித்து தி.மு.க. தொண்டர்கள் வியர்வை சிந்தி உழைத்த உழைப்பில் வெற்றி பெற்று,தேர் தலில் கையில் வைத்த மை அழி யும் முன்பே கூட்டணி துரோகம் செய்த காங்கிரஸ் கட்சியின் செயலை இக்கூட்டம் வன்மை யாக கண்டிக்கின்றது.

தமிழ்நாட்டில் நடைபெற்று முடிந்த சட்டமன்ற பொதுத்தேர்த லுக்கு பின் காங்கிரஸ் கட்சி,திரா விட முன்னேற்ற கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மிகுந்த மனக்காய முற்றிருக்கும் கழகத்தோழர்களின் உணர் வுக்கு,மதிப்பளிக்கின்ற வகையில் நமது கழகத்தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் கழகத் தொண்டர்களின் மனநிலையை அறிந்து,ஜூன் 8 ஆம் தேதி டெல் லியில் நடைபெற்ற இந்தியா கூட் டணி கூட்டத்தில்,அதாவது காங்கி ரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் தி. மு.க.பங்கேற்காது என்று முடிவு எடுத்தும்,மேலும் அந்த கூட்டத்தில், இடம்பெற்றுள்ள மற்ற கட்சிகள் முன்வைக்கும் நாட்டு நலனை பாதிக்கும் பிரச்சினைகளில் தி.மு.க. என் றைக்கும் குரல் கொடுக்கும் என்று முடிவெடுத்த தி.மு.க தலைமை கழகத்திற்கும்,கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுக்கும், இக்கூட்டம் மன தார பாராட்டி மகிழ்கின்றது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சிகரத்தைத் தகரம் பழிக்கலாமா?

எம்.ஜி.ஆர். இறந்த போது. 1988 ஆம் வருடம் ஜனவரியில், அ.தி.மு.க. பிளவு பட்ட நேரத்தில். எம்.ஜி.ஆர், மனைவி ஜானகி அம்மையாருக்கு காங்கிரஸ் ஆதரவு தரும் என அன்றைய குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனிடம் கூறிவிட்டு கடைசி நேரத்தில் பல்டி அடித்து, ஜானகி எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கலைக்கக் காரணமாக இருந்தவர்கள் தானே காங்கிரசார்.

“1976 ஆம் ஆண்டு ஜனநாயக குரலை அடைக்காதீர்கள், இந்தியாவின் மூத்த தலைவர்களை வெளியில் விடுங்கள்” என்று தீர்மானம் போட்டதற்கு தி.மு.க. ஆட்சியையே குடியரசுத் தலைவரை வைத்து கலைத்தவர்கள்தானே காங்கிரஸினர். 1991ல் ‘விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு’ என காரணம் காட்டி. தி.மு.க. ஆட்சியைக் கலைத்த புண்ணியவான்கள் தானே காங்கிரசினர். காங்கிரஸால் திமுகவுக்கு. துரோகம் நடக்கும்போது மென்மையான பதிலைத் தந்து, தி.மு.க.விற்கு வருடலைத் தந்த கார்த்திக் சிதம்பரம் போன்றோரின் அறிக்கை காங்கிரசை வளர்க்குமா? மாணிக்கம் தாகூர் போன்று தரமின்றி பேசுபவர்களால் காங்கிரஸ் வளருமா?

“தி.மு.க.வில் வாரிசு அரசியலாம்” மாணிக்கம் தாகூர் கூறுகிறார். கசாப்புக் கடைக்காரன் காருண்யம் பேசுகிறான், ஈயத்தைப் பார்த்து இளிக்கிறது பித்தளை என்பதுபோல, சிகரத்தை தகரம் பழிக்கிறது.

வாரிசு அரசியலை இந்தியாவிற்குத் தந்ததே காங்கிரஸ் தான். முதலில் நேரு, பின் நேரு மகள் இந்திரா, இந்திரா மகன் ராஜிவ், ராஜிவ் மனைவி சோனியா, சோனியா மகன் ராகுல், ராகுல் தங்கை பிரியங்கா என அத்தனை பேரும் எம்.பி.க்கள்.மாணிக்கம் தாகூர் மட்டும் என்ன வாழுதாம். சுதர்சன நாச்சியப்பனின் அண்ணன் மகன் என்கிற தகுதியோடு டெல்லி சென்று திரும்பியதால், எம்.பி. ஆனவர். தமிழகத்தில் பல போராட்டங்கள் செய்து சிறைக்குச் சென்று எம்.பி. ஆனவரா மாணிக்கம்தாகூர்?

‘காங்கிரசை ஆதரிக்காதவர் எல்லாம் பா.ஜ.க. தான்’ என்கிற கேவலமான, தரம் கெட்ட வார்த்தைகளை மீண்டும் மீண்டும் மாணிக்கம் தாகூர் கூறக்கூடாது என எச்சரிக்கிறேன். மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி காங்கிரஸுக்கு இரண்டு இடம்தான் தருவேன் என்றதால் கோபித்துக் கொண்டு வெளியேறினீர்கள். காங்கிரஸ் திரிணாமுல் காங்கிரஸ் மோதல் என்றாலே திரிணாமுல் காங்கிரசும் பா.ஜ.க.வும் உறவு என்பதா?

உத்தரப்பிரதேசத்தில், காங்கிரசுடன் சமாஜ்வாடி மோதினால், சமாஜ்வாடி பா.ஜ.க. உடன் உறவு என்பதா?

திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சி மேற்கு வங்காளத்திலும், உத்திரபிரதேசத்திலும் சீட்டு எண்ணிக்கையில் தேர்தலுக்கு முன்பே பிரிவு,

பிரிவு என்பது வேறு, துரோகம் என்பது வேறு. ஈரம் காயாமல் எதிரியிடம் ஓடிச் சென்றது காங்கிரஸ்.

ஆளுநர் ஆட்சி கூடாது என்பதற்காகத்தான் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு என்றால், கம்யூனிஸ்ட் கட்சிகள் மாதிரி வெளியில் இருந்து ஆதரவு தர வேண்டியதுதானே?

கம்யூனிஸ்ட்கள், விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம் லீக் மாதிரி தி.மு.க.விடம் சொல்லிவிட்டுச் செல்ல வேண்டியது தானே?

விஜய் அல்லாத ஆட்சி என்கிற பேச்சு சிலரால் எழுந்தது எப்போது? நீங்கள் ஆதரவு தந்தது எப்போது? நீங்கள் அடுத்த நாளே ஆதரவு. இந்த பேச்சு சில நாள் கழித்து தான். அப்படி வந்தபோதும் இரண்டு தலைமையும் முளையி லேயே கிள்ளி வீசியது.

எம்.ஜி.ஆர். காலத்தில் ஒரிசாவின் அன்றைய தலைவர் பிஜு பட் நாயக் தி.மு.க. அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் ஒன்று சேர முயற்சி எடுத்தார். முடிவு நெருங்கியது உண்மை. கடைசி நேரத்தில் அது உடைந்து போனது. ஆனால் அது போல் ஒரு சதவிகிதம் கூட இப்போது நடந்ததா என்றால் இல்லை. தளபதி அவர்கள் முதல்வர் பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் ஜெயலலிதா இறந்தவுடன் அதிருப்தி அ.தி.மு.க.வினரின் தோழமையோடு முதல்வராகி இருக்கக் கூடாதா?

2024ல் பா.ஜ.க.விற்கு 20 எம்.பி. தேவை என்கிறபோது தளபதி அவர்கள் பா.ஜ.க.வுடன் போகக்கூடாதா? நான்கு அமைச்சர் பதவி வாங்கி இருக்கலாமே.பாண்டிச்சேரியில் ரங்கசாமிக்கு 2011, 2026 இரண்டிலும் மெஜாரிட்டி பெறாத போது தி.மு.க. அதற்கு ஆசைப்பட்டதா?

ஆளுநர் ஆட்சி வரக்கூடாது என்பதற்காகத்தான் காங்கிரஸ் ஆதரவு என்றால் அமைச்சருடன் இருக்க வேண்டியது தானே? எதற்காக முட்டி போட்டு, பல் இளித்து, மாநிலங்களவை உறுப்பினர் கேட்டு வாங்க வேண்டும்.

பிச்சை கேட்பதற்கும் ஒரு தகுதி வேண்டாமா? தேர்தலில் நின்ற தி.மு.க. வென்று இருந்தால், தி.மு.க.விடம் கேட்டிருக்கலாம். 5 சீட்டை வைத்துக்கொண்டு தேர்தலில் எதிரி காலில் விழுந்து கேட்கலாமா? தமிழக வெற்றிக்கழகமும் பாத்திரம் அறிந்து பிச்சை போட வேண்டாமா?

மாணிக்கம் தாகூர், உதயநிதிக்கு ஆலோசனை கூற வேண்டாம். ஒற்றை செங்கலில் நாடாளுமன்றத்தை கலகலக்க வைத்தவர் எங்கள் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

‘ராகுல் அரசியலில் நேர்மையானவராம்’ மாணிக்கம் தாகூர் கூறுகிறார். ராகுலின் அரசியல் நேர்மை தான் எங்களுக்கு தெரியுமே! தேஜஸ்வி யாதவினை முதல்வர் வேட்பாளர் என உடன் அறிவிக்காமல், பீகாரில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்ட ராகுல் அரசியல் தான் தெரியுமே?

நாடாளுமன்ற உறுப்பினர். காங்கிரஸ் கொடுத்த தீர்மானம், பதவி இழப்பு விதிகள் சரியில்லை என நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் பிரதமர் மன்மோகன் சிங் முன்பே முன்பே கிழித்து எறிந்து விட்டு ராகுல் அதே சட்டத்தால் பதவி இழந்து மீண்ட கதை தெரியுமே.

ராகுலின் அரசியல் தூய்மை தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மயிலாடுதுறையில் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட மண்ணின் மைந்தன் திருநாவுக்கரசருக்கு கொடுக்காமல், திருப்பெரும்புதூர் சுதாவுக்குக் கொடுத்த போதே அவரின் அரசியல் பண்பாட்டைத் தெரிந்து கொண்டோமே.

பாண்டிச்சேரியில் தி.மு.க.வுக்கு 14 இடங்கள் கொடுத்து, அதில் ஆறு இடங்களுக்கு காங்கிரஸ்காரர்களை விண்ணப்பிக்க வைத்ததோடு அந்த ஆறு பேருடன் ராகுல் புகைப்படம் வேறு எடுத்துக் கொண்டது அசிங்கமில்லையா.

வார்டு அளவில் கட்சி நடத்துபவர்கள் கூட இந்த இழிசெயலை. துரோகத்தை செய்ய மாட்டார்கள். அப்படிச் செய்ததால் தான் “லூசுக்கு எதுக்குடா வேஸ்ட்” என ஒரே ஒரு சீட்டை விட கூடுதலாக வெற்றி பெற வைக்கவில்லை.

‘தி.மு.க. பாடம் கற்க வேண்டுமாம்’ மாணிக்கம் தாகூர் கூறுகிறார். பாடம் கற்க வேண்டியது காங்கிரஸ் இல்லையா? கொடுத்த 28ல் 5ல் ஒரு பங்கு கூட முழுமையாக வெற்றி பெறாது 5 உடன் நின்றது காங்கிரஸ், நின்ற தொகுதியில் மூன்றில் ஒரு பங்கு பெற்றது தி.மு.க.

தி.மு.க. காங்கிரசுக்கு எத்தனை ஒத்துழைப்பு, எந்தெந்த வகையில் உழைப்பை பொருளாதாரத்தைத் தந்தது என்பதைப்பற்றி தேர்தலில் நின்ற காங்கிரஸ் வேட்பாளர்களைக் கேட்டால் தெரியும். ஒரு மாநிலத்தில் ஆண்ட தி.மு.க. காங்கிரசிற்கு எவ்வளவோ பொருளாதார உதவி செய்தது.

பக்கத்தில் தெலுங்கானா, கர்நாடகாவில் ஆளும் காங்கிரஸ், தி.மு.க. வேட்பாளர்களுக்கு சல்லிக்காசு தந்தது உண்டா? பாண்டிச்சேரியில் தி.மு.க. மொத்தம் ஐந்து. அதில் இப்போது 2026ல் பாண்டிச்சேரியில் கையை எதிர்த்து சூரியன் இரண்டு இடத்தில் வென்றதா? இல்லையா?

பதவிக்காக ஆசைப்படுபவர் இல்லை ராகுல் என்றால், பொது எதிரியான பா.ஜ.க.வை வீழ்த்த திரிணாமுல் காங்கிரஸிடம். பீகாரில் தேஜஸ்வி யாதவிடம், பாண்டிச்சேரியில் தி.மு.க.விடம் விட்டுப் போகாதது ஏன்?

பா.ஜ.க. புதுடெல்லியில் ஆட்சியில் இருந்தும், தமிழ்நாட்டில் வளர்ந்தும். 27 இடங்களுடன் நிறைவு. ஒரே ஒரு இடம் மட்டுமே வெற்றி பெறும் அளவு. 26 தோற்கும் தொகுதியை அ.தி.மு.க. பா.ஜ.க.வுக்கு தந்தது என்றாலும் பொது எதிரி தி.மு.க.காங்கிரஸ் தோற்றுப் போகட்டும் என விட்டுக் கொடுக்கிறது பா.ஜ.க. ஆனால் காங்கிரஸ் கட்சியோ தனது கூட்டாளிகளை அழிக்க நினைக்கிறது.

ஒரு காலத்தில் 5 எம்.பி. க்களை மக்களவையில் பெற்ற கட்சி பா.ஜ.க. சி.பி.ஆர்., பொன்னார், திருநாவுக்கரசர், நீலகிரி மதன். ரங்கராஜன் குமாரமங்கலம் என ஐந்து எம்.பி.க்கள்.

25 ஆண்டில் பல மடங்கு உயர்ந்தும், அடக்கி வாசித்தது பா.ஜ.க. ஆனால் காங்கிரஸ் 28 பெற்றும், ராஜ்யசபா வந்தும் அடங்காது, எதிரியிடம் ஓடோடி இரண்டு அமைச்சர். ஒரு ராஜ்யசபா உறுப்பினர் பெற்றது. ஆனால் பதவி ஆசை பிடிக்காத காங்கிரஸ் என பெருமை வேறு.



கவிஞர்
காசிமுத்து மாணிக்கம்
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

காங்கிரஸ் பரம்பரையாக ஆண்ட பாண்டிச்சேரியில் ஒரே இடம். அதிலும் முதல்வர் வேட்பாளர் வைத்தியலிங்கத்திற்கு டெபாசிட் போனது. என்றாலும் அடங்காமல் பேசக்கூடாது காங்கிரஸ்.

தி.மு.க. தினமும் ஒரு நிலைப்பாடாம். எங்கே? காங்கிரஸிலா? தி.மு.க.விலா?

நேற்று வரை கர்நாடகத்தின் முதல்வர் சித்தராமையயா, இன்று சிவக்குமார். நேற்று முன் தினம் அமைச்சரான ராமலிங்கம் ரெட்டி பதவி ஏற்பு. நேற்று ராஜினாமா. இன்று மீண்டும் பதவி ஏற்பு. தினம் ஒரு நிலைப்பாடு காங்கிரஸ் என்பதற்கு உதாரணம் போதுமா?

இதுவரை தெலுங்கானா, பீகார். கர்நாடகா காங்கிரஸிற்கு தி.மு.க. ஆதரவு. இனி அங்கும் காங்கிரசின் எதிரியே எங்கள் தோழன். உங்களின் தரம் இல்லா நடவடிக்கைகளால் இந்தியா முழுவதும் காங்கிரஸ் தோற்றால் அதற்கு மாணிக்கம் தாகூரே பொறுப்பு. எத்தனை பட்டாளம் கூட்டி வந்தாலும் காங்கிரஸ் ஒரு எம்.பி. தொகுதி கூட வெல்ல முடியாது. ஒன்றியத்தில் கூட்டணிகளின் துணையோடு தி.மு.க. ஆட்சியில் அமரும். அந்த ரகசியத்தை சொல்ல முடியாது.

இரட்டை வேடம் தி.மு.க. போடுகிறதாம். மாணிக்கம் தாகூர் கூறுகிறார். ஆமாம் நாங்கள் தான் கேரளாவில் கம்யூனிஸ்ட் பினராயி விஜயனை வீழ்த்தித் துரத்தியது. தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் அலுவலகம் சென்று துண்டு போட்டு பிரவீன் சக்கரவர்த்தி மாநில அமைச்சர்களுடன் சென்று எம்.பி.க்கு வாக்கு கேட்டு கெஞ்சுவது.

மீனோடு சண்டை மீன் குழம்போடு ராசி. மார்க்சிஸ்டின் முதல்வரோடு சண்டை தமிழகத்தின் மார்க்சிஸ்ட் எம்.எல்.ஏ. உடன் ராசியா? தாடிக்கொரு சீயக்காய், தலைக்கு ஒரு சீயக்காய் என்பது போல, கேரளாவுக்கு ஒரு சீயக்காய் தமிழ்நாட்டிற்கு ஒரு சீயக்காயா?

நீங்கள் கட்சி நடத்துகிறீர்களா? இல்லை முனியாண்டி விலாஸ் ஓட்டல் நடத்துகிறீர்களா? ஊருக்கு ஊர் முனியாண்டி விலாஸ் இருக்கும். ஆனால் ஓனர் வேறு வேறு என்பது போல. உங்களைப் போல நடக்க சொல்கிறார்களா?

ஓடிப் போனவளை ஓடிப் போனவள் என்று தானே கூற முடியும், மாரத்தான் ஓடுகிறார் என்றா சொல்ல முடியும்? மை காய்வதற்குள் ஓடியவளை, நாங்கள் போட்ட நகை நட்டுடன் ஓடியவளை அந்த நகையை காட்டி சிகையை உயர்த்தி கொண்டவர்களை எப்படி அழைப்பதாம். நியாயம் மீறி நடந்ததை கூறினால் மேலும் காயப்படுத்தாதீர்கள்.

ஏமாற்றி ஓடி விட்டீர்களே என வருந்தினால் மருந்திடுங்கள் அல்லது மறந்திடுங்கள். காலங்கள் கூட காயங்களை ஆற்றலாம். மாற்றலாம். பதிலுக்கு பதில் என தப்பாக பேசி தப்பு தாளம் வாசிக்க வேண்டாம்.

பாண்டிச்சேரியிலாவது ஒரு சீட் காங்கிரசுக்கு கிடைத்தது. தமிழ்நாட்டில் ஜீரோவுக்கும் குறைவான எண்ணிக்கை இல்லாததால் ஜீரோ கிடைக்கும் காங்கிரஸ் ஜீரோ தான் தளபதி ஸ்டாலின் என்றைக்கும் இந்தியாவின் ஹீரோ தான்.

அன்று போபர்ஸ் ஊழல் முதல் இன்று நேஷனல் ஜெரால்டு ஊழல் வழக்காடு மன்றம் படிகட்டு ஏறும். ஆனால் தளபதிக்கு பொய்யாக கூட வழக்கில்லை. எங்கள் தளபதி சலவை செய்யப்பட்ட நிலவு போல தூய்மையான தலைவர்.

மீண்டு வருவார் மீண்டும். மீண்டும் வருவார்.

விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம்,கமலாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் குழந்தை நேயப்பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.17.15 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கணினி அறை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தினகரன், ஹைகோர்ட் மஹாராஜா பள்ளித் தலைமை ஆசிரியை மெஜி ஒன்றிய பொறியாளர் செல்வஜோதி விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, விளாத்திகுளம் பேரூர் கழக பொருளாளர் சரவணன், கிளைச் செயலாளர் சுப்பையா கழக நிர்வாகி வேலுச்சாமி உள்ளிட்ட ஆசிரிய– ஆசிரியைகள், மாணவ – மாணவிகள் கலந்து கொண்டனர்.

தேனி வடக்கு மாவட்டம் போடி அரசு மருத்துவமனையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு ஜூன் 3 அன்று பிறந்த குழந்தைகளுக்கு சொந்த செலவில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தங்க மோதிரம் வழங்கினார். உடன் நகர செயலாளர் புருஷோத்தமன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆசிப் கான், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விஜயகுமார், வீரபாண்டி, பேரூராட்சி தலைவர் மிதின் சக்கரவர்த்தி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.